# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No. 77/2023**
Prosecution: **PW- 6**

**Deposition of the witness of LW- 10**

| | | | |
|---|---|---|---|
| **Name** | திரு. சரண்குமார் | **District** | இராணிப்பேட்டை |
| **Father's Name** | வெங்கடேசன் | **Calling** | ஓட்டுநர் |
| **Age** | 38/2026 | **Religion** | --- |
| **Village/Town** | இராமாபுரம் | **Caste** | --- |
| **Taluk** | வாலாஜா | **Aadhar Card No.** | 2952 7188 0568 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2026.

1,3, 5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி காவலில் இருந்து பிடி ஆணை மூலமாக நேரடியாக ஆஜர் செய்யப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 4ம் எதிரி தன் வழக்கில் தானே ஆஜராவதாக தெரிவித்தார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:–</u>

1. நான் தற்பொழுது எண்.4/23, துர்கையம்மன் கோவில் தெரு, இராமபுரம், வாலாஜாவில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறனே்.

2. என்னிடம் காட்டப்படும் ஒன்றாம் எதிரி விஜயின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். சுமார் 8 வருடத்திற்கு முன்பு மாலை நேரத்தில் இராமபுரம் கொள்ளைமேட்டை தாண்டி கோவில் அருகே போலீசார் என்னிடம் மேற்கண்ட இரண்டு கையொப்பங்களை பெற்றனர். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என் முன்னிலையில் போலீசார் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பங்கள் **அ.த.சா.2 மற்றும் அ.த.சா.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்காததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. காவல்துறையினர் விசாரணையின் போது, கடந்த 31.08.2018 ஆம் தேதி பகல் 1 மணிக்கு ஆற்காட்டில் இருந்து வேலூர் நோக்கி சென்ற இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபரை பிடித்து போலீசார் விசாரித்தபோது அவர் தனது பெயர் விஜய் என்றும், அவர் தானாக முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் அவரை காரணம் கூறி கைது செய்து எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். 1ம் எதிரி விஜய் என் முன்னிலையிலும், அசோக் குமார் முன்னிலையிலும் தானாக முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலமான கடந்த 31.01.2018ம் தேதி தானம், பாஸ்கர் (எ) பகுடு பாஸ்கர், ரமணா, நாராயணன் மற்றும் லோகேஷ் ஆகிய 4 நபர்களும் ஆயில்யம் கிராம், குலுச்சி லிங்கேஸ்வரின் கோவிலில் பவுர்ணமி பூஜைக்கு பெண்கள் நகை அணிந்துகொண்டு வருவார்கள் என்று அவர்களிடம் நகை பறிக்கலாம் என்று நாங்கள் நோட்டம் இட்டபோது பகல் 11 மணிக்கு 4 நபர்கள் இரு ஜோடிகலாக வந்தபோது நாங்கள் 5 நபர்களும் கத்தியை காட்டி வழி மடக்கி இரண்டு பெண்களை முடியை பிடித்து பைரவர் கோவில் அருகே இழுத்து சென்று ஒரு பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து அவர் அணிந்திருந்த கம்பலை பாஸ்கரிடம் கொடுக்க சொல்லி மற்றோரு பெண் கழுத்தில் அணிந்திருந்த செயினை கேட்டபோது அந்த செயின் கவரிங் நகை என்று சொல்லிக்கொண்டிருந்தபோது ரமணன் மற்றும் நாராயணன் மடக்கி வைத்திருந்த 2 பையன்களும் எங்களை தள்ளி விடவே நாங்கள் கத்தியை காட்டி உங்களை குத்திவிடுவோம் என்று மிரட்டிவிட்டு அந்த இடத்தில் இருந்து ஓடிபோய் விட்டதாகவும், அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றால் சரியல்ல. மேலும் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நாங்கள் தாஜ்புரா பெட்ரோல் பங்கின் பின் புறம் முட்புதரில் வண்டியையும், வண்டியின் சீட்டிற்கு அடியில் கத்தியை மறைத்துவைத்துவிட்டு அருகில் இருந்த விஜபி சிட்டி பிளாட் வழியாக மெயின்ரோட்டிற்கு வந்தபோது ஆற்காடு காவல் ஆய்வாளர் எங்களை பிடித்துவிட்டதாகவும், நாங்கள் பயன்படுத்திய கத்தியும், இருசக்கர வாகனத்தையும் தங்களிடம் அடையாளம் காட்டி ஆஜர் செய்கிறேன் என்று

அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்றால் சரியல்ல.

2.அன்றைய தினமே எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பகல் 2.30 மணிக்கு தாஜ்புரா பெட்ரோல் பங்கின் பின் புறம் உள்ள முட்புதரில் சென்று 1ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த 1.பதிவு செய்யாத கருப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனம் ஒன்று 2.இன்ஜனி எண்.DKYCHB21170. 3. Ch.No.MD2A13EY3HCB42786 4. ஒரு அடி நீளம் உள்ள ஒரு கத்தி ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினாரா என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் நானும், அசோக் குமாரும் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.